# மதுரையில் நாளை வைகையாற்றில் எழுந்தருளுகிறார் அழகர்

**மதுரை, ஏப். 29:** மதுரை வைகையாற்றில் அழகர் எழுந்தருளும் வைபவம் வெள்ளிக்கிழமை (மே 1) காலை நடைபெறுகிறது.

அழகர்கோவில் கள்ளழகர் கோயிலின் சித்திரைப் பெருந்திருவிழா கடந்த திங்கள்கிழமை தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் கள்ளழகர் மதுரைக்குப் புறப்படும் நிகழ்வு புதன்கிழமை மாலை நடைபெற்றது. மதுரைக்கு வரும் கள்ளழகரை பக்தர்கள் வரவேற்கும் எதிர்சேவை வியாழக்கிழமை நடைபெறுகிறது.

இதையொட்டி, மதுரை மாநகரில் அழகர்கோவில் சாலை, புதுநத்தம் சாலையின் இருபுறங்களிலும் 490–க்கும் அதிகமான திருக்கண் மண்டபங்கள் மலர்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இந்தத் திருக்கண் மண்டபங்களில் கள்ளழகர் வியாழக்கிழமை எழுந்தருளி சேவை சாதிக்கிறார். இரவு 8.30 மணிக்கு தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாஜலபதி கோயிலில் திருமஞ்சனமாகிறார்.

பிறகு, இரவு 11.30 மணிக்கு பிரசன்ன வெங்கடாஜலபதி கோயிலில் கள்ளர் கோலம் களைந்து, சுந்தரராஜப் பெருமாளாக (அழகர்) கோலம் பூண்டு, தங்கக் குதிரை வாகனத்தில் புறப்படுகிறார். இதைத் தொடர்ந்து, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் தாயார் சூடிக்களைந்த மாலையை அணிந்து வெட்டிவேர் சப்பரத்தில் சேவை சாதிக்கிறார்.

வெள்ளிக்கிழமை (மே 1) அதிகாலை 3 மணிக்கு தல்லாகுளம் கருப்பண சுவாமி கோயில் எதிரே ஆயிரம் பொன் சப்பரத்தில் அழகர் எழுந்தருளுகிறார். இதைத் தொடர்ந்து, லட்சக்கணக்கான பக்தர்கள் புடைசூழ, பக்தி முழக்கங்களுடன் வைகையாற்றுக்கு புறப்படும் அழகர், காலை 5.35 மணிக்கு மதுரை வைகையாற்றில் எழுந்தருளுகிறார்.

அங்கு வீரராகவப் பெருமாளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்வு உள்ளிட்ட ஐதீக முறைப்படியான பூஜைகளுக்கு பிறகு, காலை 7.25 மணிக்கு வைகையாற்றிலிருந்து புறப்பட்டு, ராமராயர் மண்டபத்தில் எழுந்தருளுகிறார். இரவு 9 மணிக்கு வண்டியூர் வீரராகவப் பெருமாள் கோயிலில் அழகர் எழுந்தருளுகிறார்.

இந்த நிகழ்வுகளில் 5 லட்சத்துக்கும் அதிகமானோர் பங்கேற்பர் என்பதால் மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி நிர்வாகம் சார்பில் விரிவான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் பக்தர்களின் வசதிக்காக 50 இடங்களில் தற்காலிக தண்ணீர் தொட்டிகளும், 8 இடங்களில் தற்காலிகக் கழிப்பறைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

அழகர் ஆற்றில் எழுந்தருளும் பகுதி அருகே இரு மருத்துவக் குழுக்கள் மருத்துவ சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன. இவை தவிர, 35 இடங்களில் மாநகராட்சி சுகாதாரத் துறை சார்பில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. இதில், ஆயுதப்படை குடியிருப்பு மாரியம்மன் கோயில் வளாகம், தல்லாகுளம் பெருமாள் கோயில் அருகில், ஆழ்வார்புரம் ஆகிய பகுதிகளில் பல்நோக்கு சிகிச்சை வசதியுடன் மருத்துவ முகாம்கள் நடைபெறும். 20–க்கும் அதிகமான அவசர ஊர்திகள் சுழற்சி முறையில் இயக்கப்படும்.

மேலும், மாநகரக் காவல் துறை, தென்மண்டல காவல் துறை சார்பில் 5 ஆயிரம் போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். மாநகராட்சி நிர்வாகம் சார்பில் 600 தூய்மைப் பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்தப் பணியில் 25 வாகனங்களும் பயன்படுத்தப்படவுள்ளன.

ஆற்றில் அழகர் எழுந்தருளும் வைபவத்தில் பங்கேற்கும் பக்தர்களை நெறிப்படுத்த வைகையாற்றுப் பகுதியில் மூங்கில் கம்புகளால் தேவையான இடங்களில் தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

**மண்டூக மகரிஷிக்கு சாப விமோசனம்:** அழகர் சேஷ வாகனத்தில் தேனூர் மண்டபத்தில் எழுந்தருளும் நிகழ்வு சனிக்கிழமை (மே 2) காலை 9 மணிக்கும், அங்கு மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் அளிக்கும் நிகழ்வு பகல் 11.30 மணிக்கும், அனுமார்பட்டி ஆஞ்சநேயர் கோயிலுக்கு எழுந்தருளும் நிகழ்வு பிற்பகல் 3.30 மணிக்கும் நடைபெறும்.

இதையடுத்து, இரவு 10 மணிக்கு ராமராயர் மண்டபத்தில் திருமஞ்சனமாகி, இரவு 12 மணிக்கு அழகர் தசாவதாரத்தில் காட்சியளிக்கிறார்.

அழகர் மீண்டும் கள்ளழகர் கோலம் பூண்டு, அழகர் மலைக்கு புறப்படும் நிகழ்வு திங்கள்கிழமை (மே 4) நடைபெறும். கள்ளழகர் அழகர்மலைக்கு சென்றடையும் நிகழ்வு மறுநாள் செவ்வாய்க்கிழமை நடைபெறும்.





வைகையாற்றில் பக்தர்களை நெறிப்படுத்துவதற்காக மூங்கில் கம்புகளால் அமைக்கப்படும் தடுப்புகள். (வலது) அழகர் எழுந்தருளும் வைபவத்தையொட்டி, புதன்கிழமை இரவு மின்னொளியில் ஜொலித்த வைகையாற்றுப் பாலம்.

# இளைஞருக்கு அரிவாள் வெட்டு: 8 பேர் மீது வழக்கு

**திருப்பரங்குன்றம், ஏப். 29:** திருமங்கலத்தை அடுத்த கள்ளிக்குடி அருகே இரு தரப்பினரிடையே ஏற்பட்ட மோதலில் இளைஞருக்கு அரிவாள் வெட்டு விழுந்தது. இதுதொடர்பாக 8 பேர் மீது போலீஸார் வழக்குப்பதிந்து விசாரிக்கின்றனர்.

கள்ளிக்குடி வட்டம், குராயூர் கிராமத்தைச் சேர்ந்தவர் வினோத்குமார் (33). லாரி ஓட்டுநர். இவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த பிரகாஷ் கண்ணனுக்கும் ஏற்கெனவே முன்விரோதம் இருந்து வந்தது. இந்த நிலையில், திங்கள்கிழமை நள்ளிரவு 12 மணிக்கு குராயூர் அய்யனார் கோயில் அருகே வினோத் குமார் லாரியை ஓட்டி வந்தார்.

அப்போது அருண்குமார், பிரகாஷ் கண்ணன், மகாலிங்கம் ஆகியோர் இருசக்கர வாகனத்தில் வந்து லாரியை வழிமறித்து குராயூர் பகுதியில் உள்ள கவுண்டமா நதி ஓடையில் மணல் அள்ள எதிர்ப்புத் தெரிவித்து கண்ணாடியை அடித்து உடைத்தனர். மேலும் வினோத் குமாரையும் தாக்கினர்.

இந்த நிலையில், குராயூரைச் சேர்ந்த கலாநிதி, வினோத் குமார், அஜித் உள்ளிட்ட 5 பேர் லாரியில் மணல் ஏற்றிக் கொண்டு செவ்வாய்க்கிழமை சென்றனர். அப்போது பிரகாஷ் கண்ணன் தரப்பைச் சேர்ந்தவர்கள் லாரியை வழிமறித்து நிறுத்தினர்.

இதையடுத்து, லாரியில் இருந்தவர்கள் அரிவாள், வேல்கம்பு உள்ளிட்ட ஆயுதங்களால் பிரகாஷ் கண்ணனை தாக்கினர். இதில் பலத்த காயமடைந்த பிரகாஷ் கண்ணனை அருகில் இருந்தவர்கள் மீட்டு விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து தகவலறிந்த சென்னம்பட்டி கிராம நிர்வாக அலுவலர் ஜெயா சம்பவ இடத்தை பார்வையிட்டார். அங்கு மணல் அள்ளப்பட்டிருப்பது தெரியவந்ததையடுத்து, கள்ளிக்குடி காவல் நிலையத்தில் அவர் புகார் அளித்தார்.

இதுதொடர்பாக கள்ளிக்குடி போலீஸார் இரு தரப்பைச் சேர்ந்த 8 பேர் மீது வழக்குப்பதிந்து விசாரிக்கின்றனர்.

# மதுரையில் நாளை போக்குவரத்து மாற்றம்

**மதுரை, ஏப். 29:** மதுரையில் அழகர் வைகையாற்றில் எழுந்தருளும் வைபவத்தையொட்டி, வெள்ளிக்கிழமை (மே 1) போக்குவரத்து மாற்றம் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து மதுரை மாநகரக் காவல் ஆணையர் அபிஷேக் தீக்ஷித் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மதுரையில் அழகர் வைகையாற்றில் எழுந்தருளும் வைபவம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதையொட்டி, மதுரையின் பல்வேறு இடங்களில் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது.

ராமராயர் மண்டபத்துக்குச் செல்லும் வழியிலும், ஏ.வி. உயர் நிலைப் பாலம், செல்லூர் உயர் நிலைப் பாலம் வழியாக எந்த வாகனத்துக்கும் அனுமதி இல்லை. ஒபுளா படித்துறை வைகை தென்கரை பகுதி, வைகை வடகரைகளில் கார், இதர வாகனங்கள் நிறுத்த அனுமதியில்லை.

வைகை தென்கரை பகுதியிலிருந்து எந்த வாகனமும் ஏ.வி. உயர் நிலைப் பாலம், செல்லூர் உயர்நிலைப் பாலம் வழியாக வைகை வடபகுதிக்கு வர அனுமதி இல்லை. புதுநத்தம் சாலை, அழகர்கோவில் சாலை, அண்ணாநகர், கே.கே.நகர், நகரின் பிற பகுதிகளிலிருந்து அனுமதி அட்டையுடன் கார்களில் வருபவர்கள் வெள்ளிக்கிழமை தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் நிறுத்திக் கொள்ளலாம்.

புதுநத்தம் சாலை, அழகர்கோவில் சாலை, மேலூர் சாலையிலிருந்து கீழவாசல், சிம்மக்கல் வழியாகச் செல்ல வேண்டிய மாநகரப் பேருந்துகள், கனரக வாகனங்கள், பந்தயச் சாலை, நத்தம் சாலை சந்திப்பு, பாண்டியன் தங்கும் விடுதி சந்திப்பு, பெரியார் சிலை சந்திப்பு, மாவட்ட நீதிமன்றம், கே.கே.நகர் தோரண வாயில், கே.கே.நகர் சாலை, ஆவின் சந்திப்பு, அரவிந்த் மருத்துவமனை சந்திப்பு, குருவிக்காரன் சாலை, கணேஷ் திரையரங்கம் சந்திப்பு, காமராஜர் சாலை, முனிச்சாலை சந்திப்பு, பழைய குயவர்பாளையம் சாலை, தெற்குவெளி வீதி வழியாகச் செல்ல வேண்டும்.

பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து புதுநத்தம் சாலை, அழகர்கோவில் சாலை, மேலூர் சாலைக்குச் செல்ல வேண்டிய வாகனங்கள் அனைத்தும் கட்டபொம்மன் சிலை, தெற்குமாட்டுவீதி, கீழவாசல் சந்திப்பு, காமராஜர் சாலை, முனிச்சாலை, குருவிக்காரன் சாலை, அரவிந்த் மருத்துவமனை, ஆவின் சந்திப்பு, கே.கே. நகர் சாலை, கே.கே.நகர் தோரண வாயில், மேலூர் 120 அடி சாலை வழியாகச் செல்ல வேண்டும். தத்தனேரி சாலையிலிருந்து புதுநத்தம் சாலை, அழகர்கோவில் சாலை, மேலூர் சாலைக்குச் செல்ல வேண்டிய வாகனங்கள் அனைத்தும் எல்.ஐ.சி. சந்திப்பு, குலமங்கலம் சாலை, செல்லூர் 60 அடி சாலை, பி.டி. ராஜன் சாலை வழியாகச் செல்ல வேண்டும்.

கள்ளழகர் எதிர்சேவையின் போது பக்தர்கள் தங்களது நான்கு, இரு சக்கர வாகனங்களை கோகலே சாலை, திருமுக்குளம் சாலை, பழைய அக்ரஹாரம் தெரு, லாலா லஜபதி ராய் சாலை, செவன்த்டே பள்ளி மைதானம், அல் அமீன் பள்ளி வளாகம், மைதானம், எல்.பி.என். பள்ளி மைதானம், ஐடிஐ மைதானம், புதூர் சேத்னா பள்ளி மைதானம், ஒய்.எம்.சி.ஏ. பள்ளி மைதானம், மேரியான் பள்ளி மைதானம் ஆகிய இடங்களில் நிறுத்திக் கொள்ளலாம்.

அழகர் வைகையாற்றில் இறங்கும் நிகழ்வில் பங்கேற்க வரும் பக்தர்கள் தங்களது நான்கு, இருசக்கர வாகனங்களை காந்தி அருங்காட்சியக மைதானம், மருத்துவர் தங்கராஜ் சாலை, பந்தயச் சாலை மைதானம், காமராஜ் பல்கலை. கல்லூரி மைதானம், காமராஜர் பல்கலை. மாலை நேரக் கல்லூரி மைதானம், சாய்ராம் பள்ளி, பொதுப்பணித் துறை அலுவலகம், தமுக்கம் மைதான வாகன நிறுத்தம், வடக்கு மாசி வீதி, கீழமாசி வீதி ஆகிய இடங்கள், சாலைகளில் வாகனங்களை நிறுத்திக் கொள்ளலாம்.

மேலும், கீழவெளி வீதியில் அம்சவல்லி சந்திப்பு முதல் கீழவாசல் வரையிலும், கீழமாசி வீதியில் தேரடி முதல் விளக்குத் தூண் வரையிலும், வடக்கு மாசி வீதியிலும் வாகனங்களை சாலையின் ஓரமாக நிறுத்திக் கொள்ளலாம். அம்சவல்லி சந்திப்பிலிருந்து அண்ணா சிலை சந்திப்பு வரை அனுமதிச் சீட்டு உள்ள வாகனங்களைத் தவிர வேறு வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை.

அழகர்கோவில் சாலை முதல் கோரிப்பாளையம் வரை, அண்ணா பேருந்து நிலையம் முதல் கோரிப்பாளையம் வரை, கபடி ரவுண்டானா முதல் கோரிப்பாளையம் வரை எந்த வாகனமும் செல்ல அனுமதி இல்லை என்றார் அவர்.

# எஸ்.ஆர்.வி. மக்கள் நல மன்ற நிர்வாகிகள் கூட்டம்

**திருப்பரங்குன்றம், ஏப். 29:** திருப்பரங்குன்றத்தை அடுத்த ஹார்விபட்டியில் ஸ்ரீமான் எஸ்.ஆர்.வி. மக்கள் நல மன்ற நிர்வாகிகள் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

தனியார் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு மன்றத் தலைவர் ஜி.அய்யல்ராஜ் தலைமை வகித்தார். மன்றப் பொருளாளர் எஸ்.அண்ணாமலை முன்னிலை வகித்தார். கூட்டத்தில் ஸ்ரீமான் எஸ்.ஆர்.வி. மக்கள் நல மன்றத்தின் 20–ஆவது ஆண்டு விழாவையொட்டி இந்த ஆண்டு 2 ஆயிரம் மாணவ–மாணவிகளுக்கு நோட்டு புத்தகங்கள் வழங்குவது, அரசுப் பள்ளிகளில் படித்து பத்தாம் வகுப்பு, 12–ஆம் வகுப்புகளில் முதல் இரண்டு இடங்களில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ, மாணவிகளுக்கு காமராஜர் விருதும், கல்வி வளர்ச்சி நிதியும், சுப்பிரமணியசாமி கோயில் அறங்காவலர் வ.சண்முகசுந்தரம் தலைமையில் வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது.

மேலும், சட்டப்பேரவைத் தேர்தலில் 85 சதவீதம் வாக்களித்த வாக்காளர்களுக்கும், இதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்திய மாவட்ட நிர்வாகத்துக்கும் பாராட்டு தெரிவிப்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.வேட்டையார், என்.ரவிச்சந்திரன், ஹார்விபட்டி அ.அரவிந்தன், பாஸ்கர் பாண்டி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.


**சிவகங்கை மாவட்டம் - கண்டனூர் பேரூராட்சி**
**தூய்மை இந்தியா இயக்கம் (SBM)**

**திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் அபராதம் விதித்தல் குறித்த அறிவிக்கை**

ந.க.எண்.73/2026    நாள்.29.04.2026

சிவகங்கை மாவட்டம், கண்டனூர் பேரூராட்சி எல்கைக்குட்பட்ட 15 வார்டு பகுதிகளிலும் பொதுமக்கள் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தக்கூடாது என்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் திறந்த வெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதோடு பல்வேறு தொற்று நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. அதனால் பொதுமக்கள் அருகில் உள்ள சமுதாயக் கழிப்பிடத்தையோ அல்லது தனிநபர் கழிப்பிடத்தையோ பயன்படுத்த வேண்டும். இதனை பயன்படுத்தாமல் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்துவதை கண்டறிந்தால், சிறுநீர் கழித்தால் ரூ.100/-ம், மலம் கழித்தால் ரூ.500/-ம் அபராதம் விதிக்கப்படுவதுடன் உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும். தற்போது, பேரூராட்சித் துறை மூலம் ஒவ்வொரு வார்டும் கண்காணிக்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பொருள் தொடர்பாக, பொதுமக்கள் பேரூராட்சி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என இதன் மூலம் கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி.**செ.சங்கீதா,** தலைவர், பேரூராட்சி மன்றம், கண்டனூர் - 630104

திருமதி.**நா.கவிதா,** செயல் அலுவலர் (கூ.பொ), பேரூராட்சி அலுவலகம், கண்டனூர் - 630104

வி.வெ.எண் : 44/2026/செமதொஅ/சிவகங்கை
நாள் : 29.04.2026



**CHANGE OF NAME**

I, **SRINIVASAN SHANTHI** Born on 24.09.1965 (Native District : Theni) Residing at No. 47, Gandhiji Road, N.R.T. Nagar, Theni - 625 531, Tamilnadu shall henceforth be known as **NANTHAGOPAL SANTHI**

**SRINIVASAN SHANTHI**
Theni
29 April, 2026



**மாண்புமிகு இந்திய உச்ச நீதிமன்றம்**
**இந்திய உச்ச நீதிமன்றத்தில் சாதாரண மேல் முறையீட்டு அதிகாரம்**
சிறப்பு அனுமதி மனு (சிவில்) எண்(கள்): 25634-25635/2025

**ஆல் இந்தியா இஸ்லாமிக் ஃபவுண்டேஷன்**
...மனுதாரர்/மேல்முறையீட்டாளர்

-எதிரிடை-

**கே.பாலு மற்றும் பலர்** ...எதிர்மனுதாரர்கள்

பெறுநர்,
வீ.அழகன். தபெ.வீரப்பன் அம்பலம்
தொப்புலம்பட்டி, கள்ளந்திரி(அஞ்சல்)
மதுரை வடக்கு தாலுகா, தமிழ்நாடு

PID: 110971/2026 FOR R(2) IN SLP(C) No.25634-25635/2025 (SEC XII)

மேற்படி சிறப்பு அனுமதி மனு இடைகால நிவாரண கோரிக்கையுடன், O.T தாக்கல் செய்ய விலக்கு, வழக்கு தாக்கல் செய்ய காலதாமத மனு, வழக்கை மீண்டும் தாக்கல் செய்ய காலதாமத மனு மற்றும் குறைகள் சரி செய்தல் போன்ற மனுக்களுடன் தாக்கல் செய்யப்பட்டு, மனுதாரரின் வழக்கறிஞர் **ஆர்.ஆர். இளம்பரிதி** அவர்கள் மூலம் 04 செப்டம்பர் 2025 அன்று விசாரணைக்கு பட்டியலிடப்பட்டது. அப்போது நீதிமன்றம் பின்வரும் உத்தரவை வழங்கியது.

1. தாமதம் மன்னிக்கப்பட்டது.
2. நான்கு வாரங்களுக்குள் பதிலளிக்க நோட்டீஸ் அனுப்பப்பட வேண்டும்
3. இதற்கிடையில் அசல் தீர்ப்பின் செயல்பாடு, அமலாக்கம் மற்றும் நிறைவேற்றம் ஆகியவற்றிற்கு இடைக்கால தடை விதிக்கப்படுகிறது. பின்னர், இந்த வழக்கு 20 ஏப்ரல் 2026 அன்று பதிவாளர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. அப்போது வழங்கப்பட்ட உத்தரவு:

* 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை தாக்கல் செய்ய வாய்ப்பு ஏற்கனவே மறுக்கப்பட்டது.
* 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்உரை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
* மனுதாரர் தரப்பில் 2ம் எதிர்மனுதாரர் குறித்து செய்தித்தாள்களில் அறிவிப்பு அனுப்ப மனு தாக்கல் செய்யப்பட்டது ("The Indian Express"-ஆங்கிலம், "Dinamani" - தமிழ்)
* மேற்படி மனு அனுமதிக்கப்பட்டது.
* மனுதாரர் வழக்கறிஞர் 04.05.2026 க்குள் செய்தித்தாள் அறிவிப்பு சான்றுடன் சத்தியப்பிரமாணம் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறார்.
* வழக்கு 13.05.2026 அன்று மீண்டும் பட்டியலிடப்படும்.
* இந்த நடைமுறை பதிவின் நகல் சம்பந்தப்பட்ட வழக்கறிஞருக்கு வழங்கப்பட வேண்டும்.

மேற்கூறிய மனு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும் போது 2ம் எதிர்மனுதாரர் நேரிடையாகவே தங்கள் வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. இந்த அறிவிப்பு கிடைத்த உடன் தாங்கள் தரப்பு விளக்கத்தை அளிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் தங்கள் தரப்பு வாதம் ஏதுமின்றி வழக்கு ஒரு தலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படும்.

அதன்பின், ஏன் இந்த சிறப்பு அனுமதி மனுவும் இடைகால நிவாரணமும் வழங்கப்படக் கூடாது என்பதை விளக்கலாம்.

மேலும், இடைகால நிவாரண கோரிக்கையும் பின்னர் விசாரணைக்கு வரும்.

2ம் எதிர்மனுதாரரான தாங்கள் order XXI, S.C.R 2013 விதி 14(1) படி, இந்த நோட்டீஸ் பெற்ற 30 நாட்களுக்குள் அல்லது விசாரணைக்கு 2 வாரங்களுக்கு முன் (எது முன்போ அது) தங்கள் எதிர்ப்பு சத்தியபிரமாணத்தை தாக்கல் செய்யலாம்.

மேற்கண்டபடி தாங்கள் ஆஜராக தவறினால், கூடுதல் நோட்டீஸ் இன்றி சிறப்பு விடுப்பு மனு முடித்து வைக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

தேதி: 25 ஏப்ரல் 2026    **உதவி பதிவாளர்**



**MANAPPURAM FINANCE LTD.**
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

**தங்க நகைகள் பொது ஏலம்**

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.05.2026 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :
திண்டுக்கல், அய்யலூர் திண்டுக்கல், 012874070032702, மதுரை, அரப்பாளையம் மதுரை, 010114070079 6018, 6039, கருப்பாயூரணி மதுரை, 011273075000024 7, தேனி, காமராஜ் பாண்டியன் ரோடு போடிநாயக்கனூர், 012692073001677 6, தேனி, 010449073003955 5, தென்கரை பெரியகுளம், 012350070003658 4,

மேற்கண்ட ஏலத்தில் பங்கேற்க விரும்பும் நபர்கள் பின்வருவனவற்றைப் பின்பற்ற வேண்டும்: ஆர்வள்ள ஏலதாரர்கள், ஏலம் நடைபெறும் அதே நாளில், ரூ. 10,000/- தொகையை ஈஎம்டி ஆக (வெற்றி பெறாத ஏலதாரர்களுக்குத் திருப்பித் தரப்படும்) என்இஎஃப்டி/ஆர்டிஜிஎஸ் மூலம் செலுத்த வேண்டும். ஏலத்தில் பங்கேற்பவர்கள் செல்லுபடியாகும் அடையாள அட்டை/பான் கார்டை வைத்திருக்க வேண்டும். மேலும் விவரங்களுக்கு 09072607147 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக


# நாகனாகுளம் ஊருணியை சீரமைக்கக் கோரிக்கை

**மதுரை, ஏப். 29:** மதுரை நாகனாகுளம் ஊருணியைச் சீரமைக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தினர்.

மதுரை மாநகராட்சி, 5–ஆவது வார்டுக்குள்பட்ட நாகனாகுளம் பகுதி மக்களின் குடிநீராதாரமாக கிருபாநகர் ஒன்றாவது தெருவில் உள்ள ஊருணி விளங்குகிறது. பருவ மழைக் காலங்களில் இந்த ஊருணியில் மழைநீர் தேங்கி நிலத்தடி நீர்மட்டம் உயர்வதால், அந்தப் பகுதி மக்களின் குடிநீர்த் தேவை நிறைவடைவதுடன், கால்நடைகளுக்கும் பயனுள்ளதாக உள்ளது. தற்போது, இந்த ஊருணி கழிவுநீர் தேங்கும் இடமாக மாறியிருப்பதாக சமூக ஆர்வலர்கள் வேதனை தெரிவித்தனர்.

இதுகுறித்து நாகனாகுளம் பகுதி பொதுமக்கள் கூறியதாவது:

இங்கு பல ஆண்டுகளாக குடியிருந்து வரும் எங்களின் குடிநீர்த் தேவையை இந்த ஊருணிதான் நிறைவு செய்து வந்தது. முன்பு நாராயணபுரம் கண்மாயிலிருந்து இந்த ஊருணிக்கு வரத்துக் கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வரப்பட்டது. இதனால், இந்தப் பகுதியின் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படாமல் இருந்தது.

இந்த நிலையில், கடந்த சில ஆண்டுகளாக வரத்துக் கால்வாய் தூர்வாரப்படாததால் ஊருணிக்கு வரும் நீர்வரத்து தடைபட்டது. மேலும், குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் ஊருணியில் கலப்பதாலும், குப்பைகள் கொட்டப்படுவதாலும் பயன்படுத்த முடியாத அளவுக்கு நீர் மாசடைந்து சுகாதாரக்கேடு ஏற்பட்டுள்ளது.



மதுரை நாகனாகுளம் பகுதியில் கழிவுநீர் கலந்தும், குப்பைகள் கொட்டப்பட்டும் மாசடைந்து காணப்படும் ஊருணி.

மேலும், துர்நாற்றம் வீசுவதாலும், அதிக அளவில் கொசுக்கள் உற்பத்தியாவதாலும் அருகில் வசிப்போர் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

நிலத்தடி நீரிலும் கழிவுநீர் கலந்து வருவதால் சிறுநீரகப் பிரச்னைகள் உள்ளிட்ட பல்வேறு நோய்களால் நாங்கள் பாதிப்படைந்து வருகிறோம். எனவே, நாகனாகுளம் ஊருணியில் கழிவுநீர் கலப்பதையும், குப்பைகள் கொட்டப்படுவதையும் தடுக்க மதுரை மாநகராட்சியும், மாவட்ட நிர்வாகமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊருணியில் குப்பைகள் கொட்டுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், நாராயணபுரம் கண்மாயிலிருந்து ஊருணிக்கு வரும் வரத்துக் கால்வாயைச் சீரமைத்து தண்ணீர் வருவதை உறுதி செய்ய வேண்டும்.

ஊருணியைச் சுற்றி பாதுகாப்புத் தடுப்புகள் அமைப்பதுடன், பொதுமக்கள் நடைபயிற்சியில் ஈடுபடும் வகையில் நடை மேடை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர் அவர்கள்.

# சாலை விபத்தில் முதியவர் உயிரிழப்பு

**மதுரை, ஏப். 29:** மதுரை மாவட்டம், செக்கானூரணி அருகே செவ்வாய்க்கிழமை சாலை விபத்தில் முதியவர் உயிரிழந்தார்.

கருமாத்தூர் செட்டிகுளம் பகுதியைச் சேர்ந்த அய்யாவுத் தேவர் மகன் கணேசன் (63). இவரும், உறவினரான அதே பகுதியைச் சேர்ந்த ஆனந்த் (37), அவரது மனைவி பாண்டீஸ்வரி ஆகிய 3 பேரும் இரு சக்கர வாகனத்தில் மதுரையிலிருந்து செவ்வாய்க்கிழமை மாலை ஊருக்குச் சென்றனர்.

செக்கானூரணி அருகே சென்றபோது, இரு சக்கர வாகனம் விபத்துக்குள்ளானது. இதில் பலத்த காயமடைந்த கணேசன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதுகுறித்து தகவலறிந்து வந்த செக்கானூரணி போலீஸார் கணேசனின் உடலைக் கைப்பற்றி கூறாய்வுக்காக உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். காயமடைந்த மற்ற இருவரும் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதுகுறித்து செக்கானூரணி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.